## 2026ஆம் ஆண்டு நடக்கும் ஜனநாயகப் போரில் அணி அணியாக வேலை செய்து,

# அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணியை வீழ்த்துங்கள்!

## சிவகங்கை மாவட்ட சார்பு அணிகள் சந்திப்புக் கூட்டத்தில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சிவகங்கை, ஜூன் 20-**

**சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில், சிவகங்கை மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், "எந்த ஆதிக்கத்துக்கும் அடங்காத வரலாற்றைக் கொண்டது சிவகங்கை மண் என்பதை நிரூபிக்கும் வகையில், அடிமைகள் பாசிஸ்டுகளின் கூட்டணியை 2026 சட்டமன்றத் தேர்தலில் வீழ்த்திட வேண்டும். எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெல்ல சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும். இந்தச் சாதனையைப் படைக்க சார்பு அணி நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும்" என்று எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தந்து, கழக சார்பு அணி நிர்வாகிகளாகிய உங்களை எல்லாம் சந்தித்துப் பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். கடந்த இரண்டு நாட்களாக பல்வேறு நிகழ்ச்சிகள். உங்களை சந்திக்காமல் சென்று இருந்தால் நீங்கள் எல்லாம் யோசித்து இருப்பீர்கள்.

நம் மாவட்டத்திற்கு வந்து பொதுமக்களை எல்லாம் சந்தித்து, அரசு அதிகாரிகளை சந்தித்துவிட்டு, கடைசியில் நம்மைப் பார்க்காமல் சென்றுவிட்டார் என்று நினைத்திருப்பீர்கள். அந்த ஏக்கம் உங்களுக்கும், எனக்கும் இருந்திருக்கும். அதனால்தான், உங்களையும் திருப்திப்படுத்த வேண்டும், நானும் திருப்தி அடைய வேண்டும் என்று இன்றைக்கு உங்களை சந்திக்க வந்து இருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் இன்று இருந்தது. நேரம் இருக்காது, விமானத்தைப் பிடிக்க வேண்டும், நாளை காலை நம் முதலமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் இருக்கிறது. அதற்கு கண்டிப்பாக நான் அங்கு செல்ல வேண்டும். அதனால்தான் இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தை பிறகு ஒருநாள் வைத்துக்கொள்ளலாம் என்று தள்ளி வைத்துவிட்டோம். ஆனால், சார்பு அணிகள் கூட்டத்தில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டுமென்ற உணர்வோடு இங்கே வந்திருக்கிறேன்.

மாவட்டம் முழுக்க சிறப்பான, எழுச்சியான வரவேற்பை அளித்த உங்கள் அனைவருக்கும், கழக நிர்வாகிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வீரமும் விவேகமும்

குறிப்பாக, நம் கூட்டுறவுத் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் பெரிய கருப்பன் அவர்கள் மிகச்சிறப்பான ஏற்பாட்டை எப்போதுமே செய்வார், இப்போதும் செய்து இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், 5 நாட்களுக்கு முன்புதான் இந்த நிகழ்ச்சியே திட்டமிடப்பட்டது. குறுகிய காலத்தில் இவ்வளவு சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் பெரிய கருப்பன் அவர்களுக்கும், அவருடன் துணையாக நின்ற மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், சார்பு அணியைச் சேர்ந்த உங்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 'சிவகங்கை மண்' எப்போதும் வீரம் செறிந்த மண். வரலாற்றில் எந்த ஆதிக்கத்திற்கும் அடங்கிப்போகாத சீமை என்றால், இந்த சிவகங்கைச் சீமை என்ற பெருமை உங்களுக்கு உண்டு. 100 ஆண்டுகள் கடந்தாலும், இந்த சிவகங்கை மக்களின் வீரமும், விவேகமும் கொஞ்சம் கூட குறையவில்லை. அது உங்களின் முகத்தில் இருக்கும் எழுச்சியைப் பார்த்தாலே தெரிகிறது. அப்படிப்பட்ட சிவகங்கை மண்ணிற்கு வந்து உங்களை எல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி.

### நான் உங்களின் பிரதிநிதி

தலைவர் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்த மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் செய்தாலும், அங்கு இருக்கின்ற மாவட்டக் கழக நிர்வாகிகளைச் சந்திப்பார்கள். அங்கு ஆலோசனைக் கூட்டம் நடத்துவார். அப்போது நான் தலைவரிடம் சென்று கேட்டேன். `நீங்கள் மாவட்டக் கழக நிர்வாகிகளை மட்டும் சந்திக்கிறீர்கள். சார்பு அணியில் இருப்பவர்களை ஏன் சந்திப்பதில்லை. நீங்கள் அவர்களையும் சந்திக்க வேண்டும்' என்று கேட்டேன்.

அப்போது தலைவர் அவர்கள், "நான் மாவட்ட நிர்வாகிகளை சந்திக்கிறேன். நீ சார்பு அணி நிர்வாகிகளை சந்தித்துப் பேசு" என்று என்னிடம் சொன்னார்கள். எனவே, தலைவரின் உத்தரவை ஏற்றுத்தான் இங்கு வந்திருக்கிறேன். நானும் அடிப்படையில் ஒரு அணியின் செயலாளர்தான். எனவே, நான் உங்களின் பிரதிநிதி. எனவே, என்னச் சொன்னாலும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அதற்காக வருந்தாமல், சிறப்பான ஏற்பாடுகளைச் செய்த அவருக்கு எனது



நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சாதனை படைக்கும் சார்பு அணிகள்!

இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு பலமான கட்டமைப்பைக் கொண்ட இயக்கம் என்றால், அதில் முதல் இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட நம் பலமான கழகத்திற்கு இன்னும் மேலும் வலு சேர்க்கின்ற வகையில் 23 சார்பு அணிகள் மிகச்சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

அணிகள் என்றால், ஆங்கிலத்தில் `விங்' என்று சொல்வார்கள். யூத் விங், ஸ்டூடன்ட்ஸ் விங் என்றுச் சொல்வார்கள். அப்படி ஏன் சொல்கிறார்கள் என்றால், இன்றைக்கு கழகம் உயர உயரப் பறப்பதற்கு சிறகாக இருப்பது நமது சார்பு அணிகளாகிய நீங்கள்தான் காரணம். அதனால்தான் சமீபத்தில் நடந்த பொதுக்குழுவில் தலைவர் அவர்கள் 23 அணிகளை அதிகரித்து, கூடுதலாக இரண்டு அணிகளை அறிவித்தார்கள். ஒன்று கல்வியாளர்கள் அணி, இன்னொன்று மாற்றுத்திறனாளிகள் அணி.

எனக்குத் தெரிந்து இந்தியாவிலேயே எந்த இயக்கத்திற்கும் மாற்றுத்திறனாளிகள் அணி என்ற ஒன்று கிடையாது. அந்த அளவிற்கு நம் தலைவர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு சிந்திக்கின்ற தலைவர், நம் தலைவர் அவர்கள்.

ஆகவே, நீங்கள் நாம் வெறும் சார்பு அணிதானே என்று சும்மா இருந்துவிடக் கூடாது. சார்பு அணி என்பது சாதனை படைக்கின்ற அணி என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். சார்பு அணி என்பது கழகத்தைச் சார்ந்து இருக்கின்ற அணி என்று அர்த்தம் கிடையாது. கழகம்தான் உங்களைச் சார்ந்து இருக்கிறது என்ற நிலைமையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

சார்பு அணிகளில் சிறப்பாக உழைத்தவர்கள் இன்றைக்கு தலைமைக் கழகத்தில், மாவட்டக் கழகத்தில், பல்வேறு பொறுப்புகளில் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக அக்கா தமிழரசி இருக்கிறார்கள். அவர் மகளிர் அணியைச் சார்ந்தவர். நாடாளுமன்ற உறுப்பினர்களாக, பல்வேறு மாவட்டக் கழகச் செயலாளர்களாக இருக்கிறார்கள். ஏன் இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டின் முதலமைச்சரையே உருவாக்கியது நம் இளைஞர் அணிதான். கழகத்தின் பொதுச்செயலாளரை உருவாக்கியது மாணவர் அணி. இப்படி ஒவ்வொரு அணிக்கும் ஒரு சிறப்பு உண்டு.

மாணவர் அணியை தவிர்த்துவிட்டு, 'இந்தி எதிர்ப்பு வரலாறு' கிடையாது. இந்தியாவிலேயே முதன்முதலில் தொடங்கப்பட்ட இளைஞர் அணி என்ற சிறப்பைப் பெற்றது நம் கழக இளைஞர் அணி. இன்றைக்கு இளைஞர்களுக்கு அரசியல் அறிவை ஊட்டுவது நம் இளைஞர் அணிதான். அதேபோல நம் சட்டத்துறை அணிக்கும் பல பெருமைகள் உண்டு. பல சட்டப் போராட்டங்களை நடத்தி வெற்றி பெற்றது நம் வழக்கறிஞர்கள் அணி. இன்னும் சொல்லப்போனால், நம் மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலத்திற்கும் ஒரு எடுத்துக்காட்டாக, அனைத்து மாநிலங்களின் உரிமையையும் பெற்றுக் கொடுத்தது, நம் இளைஞர் அணி. அப்படி ஒவ்வொரு அணிக்கும் ஒரு சிறப்பு உண்டு.

### அமித்ஷா கட்டுப்பாட்டில் அ.தி.மு.க.!

இப்போது, தகவல் தொழில்நுட்ப அணி தேர்தல் நேரத்தில் மிகச்சிறப்பான செயல்பட்டு இருக்கிறார்கள். எனவே நான் சொல்ல வருவது என்னவென்றால், சார்பு அணியில் இருக்கின்ற நீங்கள் சரியாக உழைத்தீர்கள் என்றால், உங்களுக்கான அங்கீகாரத்தை சரியான நேரத்தில் நம் தலைவர் அவர்கள் வழங்குவார்.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் கட்டுப்பாட்டில் 100 வாக்குகள் இருந்தது என்றால், உங்களின் வளர்ச்சியை யாராலும் தவிர்க்க முடியாது. இன்றைக்கு நம் இயக்கத்தில் 25 அணிகள் இருக்கின்றன. ஆனால், அ.தி.மு.கவின் நிலைமை என்ன? அந்தக் கட்சியே இன்று 25 அணிகளாகப் பிரிந்து கிடக்கிறது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடுதான் நமது கொள்கை, தி.மு.க.விற்கான அடையாளம். ஆனால், அ.தி. மு.கவில் பார்த்தீர்கள் என்றால், இப்போது யாரும் எடப்பாடி பழனிசாமிக்கு கட்டுப்படுவது கிடையாது. அ.தி.மு.கவில் இருக்கின்ற அத்தனை அணியையும் கட்டுப்படுத்துகின்ற ஆள் யார் என்று பார்த்தீர்கள் என்றால், டெல்லியில் இருக்கின்ற அமித்ஷா. அவருக்குத்தான் அவர்கள் கட்டுப்பட்டு இருப்பார்கள்.

அமித் ஷாவின் கட்டுப்பாட்டில்தான் இன்றைக்கு ஒட்டுமொத்த அ.தி.மு.கவும் இருக்கிறது. அமித் ஷாவின் சூழ்ச்சி வலையில் இன்று எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் சிக்கி, மாட்டிக் கொண்டு இருக்கிறார். அதே நேரத்தில் நம் கழகத்தையும், நம் தலைவரையும் பாருங்கள். மும்மொழிக்கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறைக்கு தர வேண்டிய 2 ஆயிரத்து 500 கோடி ரூபாயை தரமாட்டேன் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே சொன்னார். ஆனால், நம் தலைவர் அவர்கள் தைரியமாகச் சொன்னார், நீ பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தால்கூட உன் புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்த மாட்டேன் என்று தைரியமாகச் சொன்ன முதலமைச்சர், நம் முதலமைச்சர் அவர்கள்.

### பா.ஜ.க.-வுக்கு ஒரே சவால் தி.மு.க.!

தொகுதி மறுவரையறையைக் கொண்டு வருகிறார்கள். மக்கள்தொகைக் கட்டுப்பாட்டை எந்த மாநிலம் சரியாக செய்து இருக்கிறதோ அவர்களுக்கு தண்டனை அது. உதாரணத்திற்கு நம் தமிழ்நாட்டு மக்களிடம் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்கள் தொகையைக் கட்டுபாட்டில் கொண்டு வந்துள்ளோம்.

தொகுதி மறுவரையறை மட்டும் வந்தால், நம்மிடம் இருக்கின்ற 39 தொகுதிகள் 31 தொகுதிகளாகக் குறைந்து 8 தொகுதிகளை நாம் இழக்க நேரிடும். இதை இந்தியாவிலேயே முதலில் எதிர்த்து குரல் கொடுத்தவர் நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள்.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற மற்ற முதலமைச்சர்களும் இதைப்பற்றி பேச ஆரம்பித்துள்ளார்கள். எனவே, ஒட்டுமொத்த இந்தியாவிற்குமே வழிகாட்டியாக இருக்கக்கூடியவர், நம் தலைவர் அவர்கள். இப்படி எல்லா வகையிலும் பா.ஜ.கவிற்கு சவாலாக இருக்கின்ற ஒரே தலைவர் என்றால், இந்தியாவிலேயே நம் தலைவர் மட்டும்தான் என்பதை நாம் உணர வேண்டும்.

### பா.ஜ.க. ஆட்சி ஊழல்கள்

10 நாட்களுக்கு முன்பு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள் மதுரைக்கு வந்து தி.மு.க. ஆட்சியில் மிகப்பெரிய ஊழல் நடக்கிறது என்று சொன்னார். அதைச் சொல்வது யார்? ஊழலால் தண்டிக்கப்பட்ட அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருக்கின்ற தலைவர் அதைச் சொல்லிவிட்டுச் செல்கிறார். ஊழலால் பலமுறை தண்டிக்கப்பட்டவர்கள் அ.தி.மு.கவினர், அவர்களுடன் கூட்டணி வைத்துக் கொண்டு நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அவதூறு பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

பா.ஜ.க.வின் ஊழலைப் பட்டியல் போட வேண்டும் என்றால், அதற்கென்று தனியாக ஒரு புத்தகமே போடலாம். மத்தியப் பிரதேசத்தில் ஆசிரியர்கள் நியமனத்தில் வியாபம் ஊழல், போர் விமானங்களை வாங்குவதில் ரஃபேல் ஊழல், ஹிண்டன்பெர்க் அம்பலப்படுத்திய அதானி ஊழல் என பல ஊழல்கள் உள்ளன. கோவிட் காலத்தில் நிவாரணப் பணிகளுக்கு பி.எம்.கேர்ஸ் என்ற வசூல் நடந்தது. 32 ஆயிரம் கோடி ரூபாய்வரை வசூல் செய்து, அதைப் பற்றி இப்போது வரைக்கும் ஒரு கணக்குகூடக் கொடுக்கவில்லை.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் இறந்து போனவர்களுக்கு மருத்துவக் காப்பீடு கொடுத்த ஆயுஸ்மான் பாரத் இன்சூரன்சில் ஊழல் நடந்தது. 'ஃப்ரீடம் 251' மேக் இன் இந்தியா என்று 251 ரூபாய்க்கு ஸ்மார்ட் போன் தருகிறோம் என்றுச் சொல்லி வசூல் செய்தார்கள். ஆனால், இன்றைக்கு வரை ஒருவருக்குகூட அலைபேசி கொடுக்கவில்லை, அதுவும் ஊழல். இந்த லட்சணத்தில் தான் அமித்ஷா நம்மைக் குறை சொல்கிறார்.

### அடகுவைத்த அ.தி.மு.க.!

இப்போது அ.தி.மு.க. மட்டும் ஆட்சியில் இருந்தால் என்ன நடந்திருக்கும் என்று பாருங்கள். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டு இருப்பார்கள். மும்மொழிக் கொள்கை இல்லை, நீங்கள் பத்து மொழிகள்கூட கொண்டு வாருங்கள் என்று 10 மொழிக்கொள்கையை தமிழ்நாட்டிற்குள் நுழைத்து இருப்பார்கள். நம்மில் பாதி பேர் இன்றைக்கு இந்தியில் பேசிக் கொண்டு இருந்திருப்போம். நீங்கள் என்ன கையெழுத்து போடச் சொல்வது, நானே டெல்லிக்கு வந்து சொல்கின்ற இடத்தில் கையெழுத்து போடுகிறேன் என்று சொல்லிவிட்டு சென்று இருப்பார்.

எப்படி அம்மையார் ஜெயலலிதா இறந்தபிறகு தமிழ்நாட்டின் மானத்தை, உரிமைகளை எல்லாம் அ.தி.மு.க, பா.ஜ.கவிடம் அடகு வைத்ததோ, அதை மீண்டும் எடப்பாடி பழனிசாமி அவர்கள் செய்து இருப்பார். இதையெல்லாம் தட்டிக்கேட்டு, குரல் கொடுத்து, எதிர்த்துக் கேள்வி கேட்கின்ற ஒரே முதலமைச்சர் நம் தலைவர் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

சார்பு அணி நிர்வாகிகள் உங்களிடம் நான் கேட்டுக்கொள்வது எல்லாம் மக்களோடு, மக்களாக நெருங்கிப் பழகுங்கள். மக்களுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள். அவர்களுடன் உரையாடுங்கள். அவர்களிடம் கழக அரசின் சாதனைகள், திட்டங்களை ஞாபகப்படுத்திக்கொண்டே இருங்கள். பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அதில் ஒரு நான்கு திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

### சாதனைகளைச் சொல்லுங்கள்!

நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். கிட்டத்தட்ட 700 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 10 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். அதேபோல் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம். பெண்கள் உயர்கல்வி படிக்க வேண்டும், பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைய வேண்டும் என்பதற்காக கொண்டுவந்த திட்டம்தான் புதுமைப்பெண் திட்டம். அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்க கல்லூரிக்குச் செல்லும் மாணவியின் வங்கிக் கணக்கில் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இந்த சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரம் மாணவ, மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்று பயன்பெற்று வருகிறார்கள். அதேபோல, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இப்படியொரு திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர் நம் முதலமைச்சர் அவர்கள்தான். இன்றைக்கு மற்ற மாநிலங்கள் எல்லாம் எப்படி இதைச் சிறப்பாகச் செயல்படுத்துகிறீர்கள் என்று பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். இத்திட்டத்தால் மாணவர்களின் வருகைப் பதிவு அதிகமாகி இருக்கிறது. ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கின்ற 22 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் இந்தத் திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள். சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 39 ஆயிரம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் பயன்பெற்று வருகிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாகத்தான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். அந்தத் திட்டத்திற்கு விண்ணப்பித்தது 1 கோடியே 60 லட்சம் மகளிர். அதில் 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு தலைவர் அவர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். சில இடங்களில் இந்த உரிமைத்தொகை எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று புகார் வருகிறது. ஜூலை 15ஆம் தேதி கலைஞர் மகளிர் உரிமைத்தொகைக்கு மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்று கழகத் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார். அதையும் சரிசெய்து நிச்சயமாக தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை கொடுக்கப்படும் என்று தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இந்த சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 2 லட்சத்து 39 ஆயிரம் மகளிர் பயன்பெற்று வருகிறார்கள். இதையெல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

### ஓரணியில் தமிழ்நாடு!

அதற்கு எந்தவொரு ஆடம்பரச் செலவும் செய்யத் தேவையில்லை. நம் அரசின் சாதனைகளைத் துண்டறிக்கையாக அச்சடித்து மக்களிடம் கொடுங்கள். பொதுமக்கள் எங்கெல்லாம் அதிகமாக கூடுகிறார்களோ, ஆங்காங்கே தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துங்கள். ஒரு மைக், ஒரு ஸ்பீக்கர் போதும். மாவட்டக் கழகத்தோடு கலந்து, ஆலோசனை செய்துவிட்டு இதைச் செய்யுங்கள்.

நமக்குள் ஒரு சில சின்னச் சின்ன பிரச்சினைகள் இருக்கலாம். அந்தப் பிரச்சினைகள் எல்லாம் பேசி சரிசெய்யக்கூடியவைதான். 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற உறுப்பினர் சேர்க்கையை மதுரை பொதுக்குழுவில் கழகத் தலைவர் அறிவித்திருக்கிறார். இந்த மிக முக்கியமான முன்னெடுப்பை நீங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்துத் தரப்பினரையும் நீங்கள் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும். களத்தில் இறங்கி, மக்களைச் சந்தித்து, இளைஞர்கள், மாணவ, மாணவிகளைச் சந்தித்து அவர்களை உறுப்பினராகக் கழகத்தில் சேருங்கள்.

ஒவ்வொரு பூத்திலும் இருக்கின்ற வாக்காளர்களை 30 சதவிகிதம் பேர்களை நம் கழகத்தில் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இங்கு இன்னொரு விஷயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் சரியாக 9 மாதங்கள்தான் இருக்கின்றன. அடுத்து வருகின்ற ஒவ்வொரு மணித்துளியும், தேர்தல் மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். சார்பு அணிகளின் உழைப்பைப் பார்த்து நம் தலைவர் அவர்கள், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் உங்களுக்கான கூடுதல் வாய்ப்பை வழங்குகின்ற அளவிற்கு உங்களின் பணிகளை சிறப்பாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

### 2026 தேர்தல் வெற்றியே இலக்கு!

நீங்கள் அப்படி களத்தில் இறங்கி வேலை பார்க்கின்ற பட்சத்தில், சார்பு அணிகளுக்கான வாய்ப்பை நான் நிச்சயம் தலைவர் அவர்களிடம் சொல்லிப் பெற்றுத்தருவேன். உங்களின் குரலாக, உங்களுக்காக நான் கட்டாயம் குரல் கொடுப்பேன். போர் என்று வந்துவிட்டால், எல்லோரும் ஒரே நேரத்தில் சென்று சண்டையிட்டோம் என்றால் தோற்றுவிடுவோம். ஒவ்வொரு அணியாகப் பிரிந்து சென்று சண்டை செய்தோம் என்றால், நிச்சயம் வெற்றி உறுதி. அணி, அணியாகச் சென்று சண்டையிட்டு எதிரிகளை நாம் வீழ்த்த வேண்டும். 2026ஆம் ஆண்டு நடக்க இருக்கின்ற ஜனநாயகப் போரில் நாமும் ஒவ்வொரு அணியாக சரியாக திட்டமிட்டு வேலை செய்து அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணியை வீழ்த்தி ஆக வேண்டும்.

நாம் இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி என்று பல அணிகளாகப் பிரிந்து இருக்கலாம். ஆனால், நாம் மனதில் வைத்துக் கொள்வது ஒன்றே, ஒன்று மட்டும்தான். கலைஞர் வழியில் வந்த நம் தலைவர் அணி என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

2026இல் தமிழ்நாட்டின் உரிமையைக் காக்கின்ற போரில், சிவகங்கை சீமைக்கே உரித்தான வீரத்தோடு கழக வீரர்கள் நீங்கள் களத்தில் உங்களின் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சிவகங்கை மாவட்டத்தில் இருக்கின்ற திருப்பத்தூர், காரைக்குடி, மானாமதுரை, சிவகங்கை ஆகிய 4 தொகுதிகளிலும் கழக வேட்பாளர்கள்தான் வெற்றிபெற போகிறார்கள் என்பதை நீங்கள் இந்த நேரத்தில் உறுதி செய்ய வேண்டும்.

அடுத்த 9 மாதம் நம் குறிக்கோள் இதுவாகத்தான் இருக்க வேண்டும். அதற்கு சார்பு அணிகள் நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். வந்திருக்கின்ற உங்கள் அத்தனை பேருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, நாளை மாணவர் அணி சார்பாக கீழடி தொடர்பாக மிகப்பெரிய போராட்டத்தை நாம் நடத்த இருக்கிறோம். நம் தொன்மை, வரலாற்றை எல்லாம் பார்க்கும்போது ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசிற்குப் பிடிக்கவில்லை.

அதையெல்லாம் எப்படித் தடுக்கலாம் என்றுதான் அவர்கள் தொடர்ந்து முயற்சித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு கண்டனம் தெரிவிக்கின்ற வகையில் மிகப்பெரிய போராட்டத்தை தலைவர் அறிவித்து இருக்கிறார்.

மாணவர் அணி அந்தப் போராட்டத்தை நடத்த இருக்கிறது. மாணவர் அணி அந்தப் போராட்டத்தை நடத்தினாலும், தமிழர்களாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களாக, சார்பு அணிகளைச் சேர்ந்தவர்களாக நாம் அத்தனைப்பேரும் அந்த போராட்டத்தில் கலந்து கொண்டு நமது கண்டனக் குரல்களையும் எழுப்ப வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான அண்ணன் பெரிய கருப்பன் அவர்களுக்கும், சார்பு அணி சார்பாக வந்து இருக்கின்ற அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, நாம் தொடர்ந்து இனி அடிக்கடி சந்திப்போம். தொடர்ந்து நாம் தொடர்பில் இருப்போம் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர் பெரிய கருப்பன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, முன்னாள் அமைச்சர் தென்னவன், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, கழக மாணவர் அணி மாநிலத் துணைச் செயலாளர் பூர்ணசங்கீதா, ராமகிருஷ்ணன், மாவட்டப் பொருளாளர் துரைராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் ஜோன்ஸ் ரோஸ் உள்பட கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிவாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.